| | | | |
|---|---|---|---|
| <?xml version="1.0" ?> | | | |
| <?xml-stylesheet type="text/css" href="home.css"?> | | | |
| <Doc id="tam-w-media- | TA00012 | " | lang="Tamil"> |
| <Header type="text"> | | | |
| <encodingDesc> | | | |
| <projectDesc> | CIIL-Tamil Corpora, Monolingual Written Text | | </projectDesc> |
| <samplingDesc> | Simple written text only has been transcribed. Diagrams, pictures, tables and verses have been omitted. Samples taken from page 14-15, 20-21, 22-23, 32-33, 36-37, 44-45, 50-51, 54-55 | | </samplingDesc> |
| </encodingDesc> | | | |
| <sourceDesc><br><biblStruct><br><source> | | | |
| | <category> | Natural, Physical and Professional Sciences | </category> |
| | <subcategory> | Astronomy | </subcategory> |
| | <text> | Book | </text> |
| | <title> | intiya kAlakkaNitam (A.D. 700-1999) | </title> |
| | <vol> | | </vol> |
| | <issue> | | </issue> |
| </source> | | | |
| <textDes> | | | |
| | <type> | | </type> |
| | <headline> | | </headline> |
| | <author> | | </author> |
| | <translator> | | </translator> |
| | <words> | 2059 | </words> |
| </textDes> | | | |
| <imprint> | | | |
| | <pubPlace> | | </pubPlace> |
| | <publisher> | | </publisher> |
| | <pubDate> | 2002 | </pubDate> |
| </imprint> | | | |
| <idno type="CIIL code"> | | CIIL-58664 | </idno> |
| <index> | | TA00012 | </index> |
| </biblStruct><br></sourceDesc> | | | |
| <profileDesc><br><creation> | | | |
| | <date> | 24-Jul-2008 | </date> |
| | <inputter> | D.Manivasuki | </inputter> |
| | <proof> | Thennarasu, S. | </proof> |
| </creation> | | | |
| <langUsage> | | Tamil | </langUsage> |
| <wsdUsage> | | | |
| <writingSystem id="ISO/IEC 10646">Universal Multiple-Octet Coded Character Set (UCS).<br></writingSystem> | | | |
| </wsdUsage> | | | |
| <textClass> | | | |
| <channel mode="w"> | | print | </channel> |
| <domain type="public"> | | | </domain> |
| </textClass><br></profileDesc> | | | |

| | | |
|---|---|---|
| </Header> | | |
| <text><body> | | |
| <p> | ஒரு ஆங்கில ஆண்டில் இரண்டு சாலிவாகன சக ஆண்டுகள் இடம்பெற்றிருக்கும். ஆங்கில ஆண்டின் தொடக்கம் முதல் சாலிவாகன சக ஆண்டுத் தொடக்கம் வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில முன் சாலிவாகன சக ஆண்டு என்றும், சாலிவாகன சக ஆண்டின் தொடக்கம் முதல் ஆங்கில ஆண்டின் இறுதிமாதம் இறுதிநாள் வரையிலான ஆங்கில ஆண்டை ஆங்கில பின் சாலிவாகன சக ஆண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, ஆங்கில ஆண்டின் சனவரி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் தமிழ்ப் பங்குனி மாதம் இறதிநாள் வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில முன் சாலிவாகன சக ஆண்டு என்றும், நிகழும் ஆண்டின் தமிழ்ச் சித்திரை மாதம் 1ந் தேதி முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில பின் சாலிவாகன சக ஆண்டு என்றும் கொள்ளலாம். | </p> |
| <p> | எடுத்துக்காட்டு – சாலிவாகன சகம் 1847இல் கி.பி. ஆண்டு 1924 – 1925 இடம்பெற்றிருக்கும். கி.பி. 1924ஆம் ஆண்டு சாலிவாகன சக முன்னாங்கில ஆண்டாகவும், கி.பி. 1925ஆம் ஆண்டு சாலிவாகன சகப் பின்னாங்கில ஆண்டாகவும் கொள்ளலாம். | </p> |
| <p> | **3. விக்கிரம சகாப்தம் (விக்கிளர சகம்)** | </p> |
| <p> | விக்கிரமாதித்தியன் பெயரால் அழைக்கப்படும் ஆண்டு இது. சாலிவாகனனிடம் போரிட்டு தோல்வியுற்ற விக்கிரமாதித்தனே இவன். இவ்வாண்டு வடஇந்தியாவில் நருமதை நதிக்கு வடக்கில் கையாளப்பட்டு வருகிறது. இதனை விக்கிரம சகம் என்று கூறுவர். தொடரெண் கொண்ட இவ்வாண்டு கி.மு. 58இல் தொடங்குகிறது. ஒவ்வொரு ஆண்டும் சித்திரை மாதம் 1ந் தேதி ஆண்டின் தொடக்கமாகவும், பங்குனி மாதம் இறுதிநாள் ஆண்டின் முடிவாகவும் அமையும். ஆங்கில ஆண்டோடு விக்கிரம சக ஆண்டின் தொடரெண்ணைக் கணக்கிட வேண்டுமாயின் ஆங்கில ஆண்டோடு (கி.பி. யில்) விக்கிரம சகம் 57ஐக் கூட்டவேண்டும். | </p> |
| <p> | ஒரு விக்கிரம சக ஆண்டில் இரண்டு ஆங்கில ஆண்டுகள் இடம்பெற்றிருக்கும். விக்கிரம சக ஆண்டின் தொடக்கம் முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி வரையிலான விக்கிரம சக ஆண்டை விக்கிரம சக முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆண்டின் இறுதி வரையிலான விக்கிரம சக ஆண்டை விக்கிரம சக பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, விக்கிரம சக ஆண்டின் சித்திரை மாதம் 1ந் தேதி முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள விக்கிரம சக ஆண்டை விக்கிரம சக முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் சனவரி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் விக்கிரம சக ஆண்டின் பங்குனிமாதம் இறுதிநாள் வரையிலான விக்கிரம சக ஆண்டை விக்கிரம சக பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். | </p> |
| | | |
| <p> | தெற்குக் கொல்லமாண்டில் இரண்டு ஆங்கில ஆண்டுகள் இடம்பெற்றிருக்கும். தெற்குக் கொல்லமாண்டின் தொடக்கம் முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி வரையிலான தெற்குக் கொல்லமாண்டைத் தெற்குக் கொல்லம் முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் தொடக்கம் முதல் நிகழும் தெற்குக் கொல்லமாண்டின் இறுதி வரையிலான தெற்குக் கொல்லமாண்டைத் தெற்குக் கொல்லம் பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, தெற்குக் கொல்லமாண்டின் ஆவணி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள தெற்குக் கொல்லமாண்டைத் தெற்குக் கொல்லம் முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் சனவரி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் தெற்குக் கொல்லமாண்டின் ஆடி மாதம் இறுதிநாள் | </p> |

| | | |
|---|---|---|
| | வரையிலான தெற்குக் கொல்லமாண்டைத் தெற்குக் கொல்லம் பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். | |
| <p> | வடக்குக் கொல்லமாண்டில் இரண்டு ஆங்கில ஆண்டுகள் இடம்பெற்றிருக்கும். வடக்குக் கொல்லமாண்டின் தொடக்கம் முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி வரையிலான வடக்குக் கொல்லமாண்டை வடக்குக் கொல்லம் முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் தொடக்கம் முதல் நிகழும் வடக்குக் கொல்லமாண்டின் இறுதி வரையிலான வடக்குக் கொல்லமாண்டை வடக்குக் கொல்லம் பின்னாங்கில் ஆண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, தெற்குக் கொல்லமாண்டின் ஆவணி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள தெற்குக் கொல்லமாண்டை தெற்குக் கொல்லம் முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் சனவரி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் தெற்குக் கொல்லமாண்டின் ஆடி மாதம் இறுதிநாள் வரையிலான தெற்குக் கொல்லமாண்டைத் தெற்கு கொல்லம் பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். | </p> |
| <p> | ஒரு வடக்குக் கொல்லமாண்டில் இரண்டு ஆங்கில ஆண்டுகள் இடம் பெற்றிருக்கும். வடக்குக் கொல்லமாண்டின் தொடக்கம் முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி வரையிலான வடக்குக் கொல்லமாண்டை வடக்குக் கொல்லம் முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் தொடக்கம் முதல் நிகழும் வடக்குக் கொல்லமாண்டின் இறுதி வரையிலான வடக்குக் கொல்லமாண்டை வடக்குக் கொல்லம் பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, வடக்குக் கொல்லமாண்டின் ஆவணி மாதம் திருவோண நட்சத்திரம் ஓனம் பண்டிகை முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள வடக்குக் கொல்லமாண்டை வடக்குக் கொல்லம் முன்னாங்கில ஆண்டு என்றும், அடுத்த ஆங்கில ஆண்டின் சனவரி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் வடக்குக் கொல்லமாண்டின் இறுதி வரை அடுத்த வடக்குக் கொல்லமாண்டின் தொடக்கம் வரையிலான வடக்குக் கொல்லமாண்டை வடக்குக் கொல்லம் பின்னாங்கில ஆண்டு என்றும் கொள்ளலாம். | </p> |
| | | |
| <p> | ஒரு ஆங்கில ஆண்டில் இரண்டு வடக்குக் கொல்லமாண்டுகள் இடம்பெற்றிருக்கும். ஆங்கில ஆண்டின் தொடக்கம் முதல் வடக்குக் கொல்லமாண்டுத் தொடக்கம் வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில முன் வடக்குக் கொல்லமாண்டு என்றும், வடக்குக் கொல்லமாண்டின் தொடக்கம் முதல் ஆங்கில ஆண்டின் இறுதி மாதம் இறுதி நாள் வரையிலான ஆங்கில ஆண்டை ஆங்கில பின் வடக்குக் கொல்லமாண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, ஆங்கில ஆண்டின் சனவரி மாதம் 1ந் தேதி முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் தமிழ் மாதம் ஆவணி திருவோணம் நட்சத்திரம் ஓனம் பண்டிகை வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில முன் வடக்குக் கொல்லமாண்டு என்று, நிகழும் ஆங்கில ஆண்டின் தமிழ்மாதம் ஆவணி திருவோண நட்சத்திரம் ஓனம் பண்டிகை முதல் நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில பின் வடக்குக் கொல்லமாண்டு என்றும் கொள்ளலாம். | </p> |
| <p> | எடுத்துக்காட்டு – கொல்லம் 400இல் கி.பி.1223 – 1224 இடம்பெற்றிருக்கும். கி.பி. 1223ஆம் ஆண்டு கொல்லம் முன்னாங்கில ஆண்டாகவும், கி.பி. 1224ஆம் ஆண்டு கொல்லம் பின்னாங்கில ஆண்டாகவும் கொள்ளலாம். அடுத்து, கி.பி.1560ல் கொல்லம் 735 – 736 இடம்பெற்றிருக்கும். கொல்லம் 735 ஆங்கில முன் கொல்லமாண்டாகவும் கொல்லம் 736 ஆங்கில பின் கொல்லமாண்டாகவும் கொள்ளலாம். | </p> |

| | | |
|---|---|---|
| <p> | 7. ஆங்கில ஆண்டு | </p> |
| <p> | இப்பொழுது பெருவழக்கில் உள்ளது இவ்வாண்டு, இவ்வாண்டு தொடரெண் கொண்டமைகிறது. கி.பி., கி.மு. என்ற அமைப்பு கொண்டது. சனவரி மாதம் 1ந் தேதி முதல் டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையான ஓராண்டைக் கொண்டது. ஒவ்வொரு மாதமும் முறையான மாத நாள்களைக் கொண்டது. லீப் வருடத்தில் மட்டும் ஒவ்வொரு பிப்ரவரி மாதமும் ஒருநாள் கூடுதலாகப் பெற்றிருக்கும். அதாவது லீப்வருட பிப்ரவரி மாதம் மட்டும் 29 நாள்கள் கொண்டிருக்கும். மற்ற மாதங்களில் எந்த மாற்றமுமில்லை. அதாவது, சனவரி 31, பிப்ரவரி 28 அல்லது 29, மார்ச்சு 31, ஏப்ரல் 30, மே 31, ஜூன் 30, ஜூலை 31, ஆகஸ்ட் 31, செப்டம்பர் 30, அக்டோபர் 31, நவம்பர் 30, டிசம்பர் 31 என ஒவ்வொரு ஆங்கில ஆண்டிலும் முறையாக மாத நாள்கள் அமைந்திருக்கும். | </p> |
| <p> | ஆங்கில ஆண்டு இந்திய ஆண்டுகள் இரண்டைப் பெற்றிருக்கும். ஆங்கில ஆண்டின் முதலிடம்பெறும் இந்திய ஆண்டை (கலியுகம், சாலிவாகன சகாப்தம், விக்கிரம சகாப்தம், திருவள்ளுவர், கொல்லம், பசலி) ஆங்கில முன்னிந்திய ஆண்டு என்றும், ஆங்கில முன்னிந்திய ஆண்டு' என்றும், ஆங்கில முன்னிந்திய ஆண்டைத் தொடர்ந்து நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாதம் 31ந் தேதிவரையிலான இந்திய ஆண்டை ஆங்கில பின்னிந்திய ஆண்டு என்றும் கொள்ளலாம். அதாவது, ஆங்கில ஆண்டுகளின் தொடக்கம் முதல் (சனவரி 1 முதல்) நிகழும் ஆங்கில ஆண்டின் இந்திய ஆண்டுகளின் தொடக்கத்திற்கு முன்னுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில முன்னிந்திய ஆண்டு என்றும், நிகழும் ஆங்கில ஆண்டில் இந்திய ஆண்டுகளின் தொடக்கம் தொடங்கி நிகழும் ஆங்கில ஆண்டின் இறுதி மாதமான டிசம்பர் மாதம் 31ந் தேதி வரையுள்ள ஆங்கில ஆண்டை ஆங்கில பின்னிந்திய ஆண்டு என்றும் கொள்ளலாம். | </p> |
| | | |
| <p> | தமிழாண்டுக்கு நிகரான ஆங்கில ஆண்டுகள் இவ்வட்டவணையின் மூலம் அறியலாம். அட்டவணை 4இல் வரிசைப்படுத்தப்பெற்ற வரிசை எண்கள் 60க்கும் ஆங்கில ஆண்டுகள் பிரிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, பிரபவ ஆண்டை எடுத்துக்கொள்வோம். இவ்வாண்டு பின்வருமாறு கி.பி. ஆங்கில ஆண்டுகளில் அமைந்திருப்பதைக் காணலாம். 7-8, 67-68, 127-128, 187-188, 247-248,307-308, 367-368, 427-428, 487-488, 547-548, 607-608, 667-668, 727-728, 787-788, 847-848, 907-908, 967-968, 1027-1028, 1087-1088, 1147-1148, 1207-1208, 1267-1268, 1327-1328, 1387-1388, 1447-1448, 1507-1508, 1567-1568, 1627-1628, 1687-1688, 1747-1748, 1807-1808, 1867-1868, 1927-1928,1987-1988, 2047-2048, இவ்வட்டவணை ஒவ்வொரு தமிழாண்டிலும் இரண்டு ஆங்கில ஆண்டுகள் இடம் பெற்றுள்ளதைக் குறிக்கப் பயன்படுகிறது. | </p> |
| <p> | **அட்டவணை – 6** | </p> |
| <p> | இவ்வட்டவணை கி.பி. ஆங்கில ஆண்டு சனவரி மாதம் 700 முதல் கி.பி. ஆங்கில ஆண்டு டிசம்பர் மாதம் 1999 வரையிலான ஆண்டுகளில் வரும் ஆங்கில மாதங்களை (சனவரி முதல் டிசம்பர் வரை) வரிசை எண் 1,2 என முறையாக ஒவ்வொரு மாதத்திற்குமாக அமைக்கப் பெற்றிருக்கும். வரிசை எண் 1,2 இல் ஒவ்வொரு மாத்திற்கு நேராகவும் ஒவ்வொரு ஆண்டிற்குக் கீழாகவும் அடையாள எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும். ஓர் ஆங்கில மாதத்தில் இரண்டு தமிழ் மாதங்கள் இடம் பெறும். அதேபோல் ஒரு தமிழ் மாத்தில் இரண்டு ஆங்கில மாதங்கள் இடம் பெறும். தமிழ் மாத்தில் ஆங்கில மாதங்களின் நாள்கள் எத்தனை எத்தனை என்பதையும், ஆங்கில மாதத்தில் தமிழ் மாதங்களின் நாள்கள் எத்தனை எத்தனை என்பதையும் கணக்கிட இவ்வட்டணை பயன்படுகிறது. | </p> |

| | | |
|---|---|---|
| <p> | வரிசை எண் 1இல் கொடுக்கப்பட்டிருக்கும் எண்கள் தமிழ் மாத மொத்த நாள்கள் ஆகும். வரிசை எண் – 2இல் குறியீடு பெறாத எண்கள் இருக்குமாயின் – கி.பி. 700 சனவரிமாதம் முதல் கி.பி 1752 செப்டம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு நிலை 1 இன்படி அமையும் முன் தமிழ் மாதங்களின் மொத்த நாள்களையும், கி.பி.1752 அக்டோபர் மாதம் முதல் கி.பி.1999 டிசம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு நிலை என் 2 இன்படி அமையும் முன் தமிழ் மாதங்களின் மொத்த நாள்களையும் குறிக்கும். வரிசைஎண் 2ல் குறியீடு பெற்ற எண்கள் (+ 1, +2) இருக்குமாயின் கி.பி. 1595 செப்டம்பர் மாதம் முதல் கி.பி. 1752 செப்டம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு நிலை எண் 2இன்படி அமையும் பின் தமிழ் மாதங்களின் மொத்த நாள்களைக் குறிக்கும். வரிசை எண் 2-இல் பூஜ்ஜியம் (0) இருக்குமாயின் கி.பி. 1595 செப்டம்பர் மாதம் முதல் கி.பி. 1752 செப்டம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு நிலை 3 இன்படி அமையும் மாதங்களின் மொத்த நாள்களை குறிக்கும். எனவே, அட்டவணை 6இன் வரிசை எண், 2இல் பல்வேறு வகையான எண்ணமைப்பு முறைகள் இருப்பதை அறியலாம். | </p> |
| | | |
| <p> | தமிழ்மாதம் – நிலை 1இன் படி அட்டவணை 6இன் வரிசை எண் 2இல் குறிப்பிடும் தமிழ் மாதம் முன்னாங்கில மாதமும் பின்னாங்கில மாதமும் குறியீடுபெறாத எண்களைப் பெற்றிருந்தால் நிலை 1இன் படியான முன் மற்றும் பின் ஆங்கில மாதங்களையே தெரிவு செய்யவேண்டும்நிலை 1இன் முன்னாங்கில வரிசை எண் 1ஐ முன்னாங்கில மொத்த நாள்களிலிருந்து கழித்தால் கிடைக்கும் தொகையென் முன்னாங்கில மாத நாள்களையும், பின்னாங்கில மாதவரிசை எண் 1வுடன் முன்னாங்கில மாத நாள்களை கழித்தால் கிடைக்கும் தொகையென் பின்னாங்கில மாத நாள்களையும் குறிக்கும். கணக்கிடவேண்டிய தமிழ் நாள் முன்னாங்கில நாள்களுக்கு இருந்தால் முன்னாங்கில வரிசையெண் 1வுடன் கணக்கிட வேண்டிய நாள்களைக் கூட்ட வேண்டும். கணக்கிடவேண்டிய தமிழ்நாள் முன்னாங்கில நாள்களுக்கு மேற்பட்டு பின்னாங்கில நாள்களுக்குள் இருந்தாள் கணக்கிட வேண்டிய நாளிலிருந்து முன்னாங்கில நாள்களைக் கழிக்க வேண்டும். | </p> |
| <p> | **ஆங்கில மாதம்** – நிலை 1இன்படி அட்டவணை 6இன் வரிசை எண் 2இல் குறிப்பிடும் (ஆங்கில மாதம்) முன்னாங்கில மாதமும் அடுத்து வரும் பின்னாங்கில மாதமும் குறியீடுபெறாத எண்களைப் பெற்றிருந்தால் நிலை 1இன்படியான முன் மற்றும் பின் தமிழ் மாதங்களையே தெரிவு செய்ய வேண்டும். நிலை 1இன் முன்னாங்கில வரிசை எண் 1லிருந்து 2ஐக் கழித்தால் கிடைக்கும் தொகையெண் முன்தமிழ்மாத நாள்களையும், முன்னாங்கில மாத மொத்த நாள்களிலிருந்து முன் தமிழ் மாத நாள்களைக் கழித்தால் கிடைக்கும் தொகையெண் பின் தமிழ்மாத நாள்களையும் குறிக்கும். கணக்கிடவேண்டிய ஆங்கிலநாள் முன்தமிழ்மாத நாள்களுக்குள் இருந்தால் கணக்கிடவேண்டிய ஆங்கிலநாளுடன் முன்னாங்கில வரிசையெண் 2இல் உள்ள தொகையெண்ணைக் கூட்ட வேண்டும். கணக்கிட வேண்டிய ஆங்கில நாள் முன்தமிழ்மாத நாள்களுக்கு மேற்பட்டு பின் தமிழ் நாள்களுக்குள் இருந்தால் கணக்கிட வேண்டிய நாளிலிருந்து முன்தமிழ் நாள்களைக் கழிக்க வேண்டும். | </p> |
| <p> | இவ்வாறு தமிழ் மற்று ஆங்கில மாதங்களின் முன் மற்றும் பின் மாதங்களைக் கணக்கிட கி.பி. 700 சனவரி மாதம் முதல் கி.பி. 1752 செப்டம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு நிலை 1ஐயும், கி.பி.1752 அக்டோபர் மாதம் முதல் கி.பி. 1999 டிசம்பர் மாதம் வரையிலான காலத்திற்கு நிலை 2ஐயும் பயன்படுத்த வேண்டும். | </p> |

| | | |
|---|---|---|
| | | |
| <p> | தமிழ்நாள் – கி.பி. 1771ம் தமிழ் கர வருடம் ஆடி மாதத்தை எடுத்துக்கொள்வோம். கி.பி. 1771ம் ஆண்டு என்பதால் இதன் நிலை 2 எனத் தீர்மானித்து ஆடி மாதத்துக்கு நிகரான முன் மற்றும் பின் ஆங்கில மாதங்களைக் குறித்துக் கொள்ள வேண்டும். இங்கு ஆடி மாதம் முன்னாங்கில மாதமாக ஜூலையையும் பின்னாங்கில மாதமாக ஆகஸ்ட்டையும் பெற்றிருக்கும். அதாவது, ஜூலை மாதத்துப் பின்னாங்கில நாள்களையும் ஆகஸ்ட் மாதத்து முன்னாங்கில நாள்களையும் ஆகஸட் மாதத்து முன்னாங்கில நாள்களையும் ஆடிமாதம் பெற்றுள்ளது எனக் கருதவேண்டும். இப்பொழுது அட்டவணை 6இன்படி ஜூலை மற்றும் ஆகஸட் மாதக் குறிப்புகளைக் குறித்துக்கொள்ளவேண்டும். ஜூலைமாதம் வரிசை எண் 1இல் 32ஆம் வரிசை எண் 2இல் 20, ஆகஸ்ட் மாதம் வரிசை எண் 1இல் 32ம் வரிசை எண் 2இல் 19ம் என இடம்பெற்றிருக்கும் எண்களைக் குறித்துக் கொள்ளவேண்டும். இப்பொழுது ஜூலை மாதத்துப் பின்னாங்கில நாள்கள் எத்தனை? ஆகஸ்ட் மாதத்து முன்னாங்கில நாள்கள் எத்தனை? என்பதைக் கணக்கிட வேண்டும். | </p> |
| <p> | அட்டவணை 6இல் ஜூலை மாதம் 32, 20 என்றவாறு இரண்டு வரிசை எண்களில் முறையே இருக்கும். வரிசை எண் 1இல் இருந்து 2ஐக் கழித்தால் (32-20=12) கிடைக்கும் தொகையெண் முன்னாங்கில நாள்களைக் கழித்தால் (31-12=19) கிடைக்கும் தொகையெண் பின்னாங்கில நாள்கள் ஆகும். | </p> |
| <p> | அட்டவணை 6இல் ஆகஸ்ட் மாதம் 32, 19 என்றவாறு இரண்டு வரிசை எண்களில் முறையே இருக்கும். வரிசை எண் 1இல், இருந்து 2ஐக் கழித்தால் (32-19=13) கிடைக்கும் தொகையெண் முன்னாங்கில நாள்கள் ஆகும். ஆகஸ்ட் மாத மொத்த நாள்களிலிருந்து முன்னாங்கில நாள்களாகும். ஜூலை மாதத்து மொத்த நாள்களிலிருந்து முன்னாங்கில நாள்களைக் கழித்தால் (31-13=18) கிடைக்கும் தொகையெண் பின்னாங்கில நாள்கள் ஆகும். ஆக, ஆடி மாத முன்னாங்கில மாதமான ஜூலை மாதம் 19 நாள்களும், பின்னாங்கில மாதமாக ஆகஸ்ட் மாதம் 13 நாள்களும் என 32 நாள்களை ஆடி மாதம் பெற்றிருப்பதை அறியலாம். எடுத்துக்காட்டிற்கு எடுத்துக்கொண்ட கி.பி.1771ஆம் தமிழ் கர வருடம் ஆடி மாதம் 15 மற்றும் 28 ஆகிய தேதிகளை ஆங்கிலத் தேதிகளாக எவ்வாறு கணக்கிடுவது என்பது பற்றிக் காண்போம். | </p> |
| <p> | ஆடி மாதம் 15ந் தேதி முன்னாங்கில மாத நாள் (19) களுக்கும் இருப்பதால் முன்னாங்கில மாத வரிசை எண் 1இல் இருந்து (32) வரிசை எண் 2ஐக் (20) கழித்துக் கிடைத்த (32-20=12) மீதியுடன் கணக்கிட வேண்டிய தமிழ்த்தேதி (15) யைக் கூட்ட (12+15=27) ஆடி மாதம் 15ந் தேதிக்கு நிகரான ஜூலைமாதத் தேதி 27 கிடைத்துவிடும். | </p> |
| | | |
| <p> | ஆங்கில ஆண்டில் முன் மற்றும் பின் இந்திய ஆண்டுகள் வைப்புமுறையின் அட்டவணைப்படி ஆங்கில முன்னிந்திய ஆண்டு அதைத் தொடர்ந்து வரும் ஆங்கில பின்னிந்திய ஆண்டும் சேர்ந்து ஓராங்கில ஆண்டைக் குறிக்கும். ஆங்கில முன்னிந்திய ஆண்டில் இந்திய ஆண்டெண் இருக்குமாயின் அவற்றுடன் அததற்குக் குறிப்பிட்ட ஆண்டெண்ணுடன் 1ஐக் கழித்துக் கழிக்க வேண்டும். ஆங்கிலப் பின்னிந்திய ஆண்டின் இந்திய ஆண்டெண் இருக்குமாயின் அவற்றுடன் அததற்குக் குறிப்பிட்ட ஆங்கில ஆண்டெண்ணுடன் 1ஐக் கூட்டிக் கழிக்க வேண்டும். இங்குக் கணக்கீட்டிற்கு எடுத்துக்கொண்ட கி.பி.736ம் ஆண்டு கலியுகமாயின் 3101ஐக் கூட்ட வேண்டும். (736+3101=3837). சாலிவாகன சகாப்தமாயின் 79ஐக் கூட்ட வேண்டும். (79+736=815). கொல்லமாண்டாயின் 824ஐக் கழிக்க வேண்டும். இங்கு 824க்குள் இவ்வாண்டெண் (736) இருப்பதால் இவ்வாண்டிற்குக் கொல்லமாண்டு | </p> |

| | | |
|---|---|---|
| | இல்லை எனலாம். திருவள்ளுவர் ஆண்டாயின் 31ஐக் கூட்ட வேண்டும் (31+736=767) இப்பொழுது ஆண்டுகளையும் மாதத்தையும் கணித்துவிட்டோம். இனித் தேதியையும் கிழமையையும் எப்படிக் காண்பது? | |
| <p> | இப்பொழுது ஆங்கிலத் தேதியில் இருந்து முன்தமிழ் மாத நாள்களைக் கழித்தால் (22-19=3) ஆங்கிலத் தேதிக்குக (22) நிகரான தமிழ்த்தேதி (சித்திரை 3) கிடைக்கும். எனவே, 22ந் தேதியானது சித்திரை மாதம் 3ந் தேதியைப் பெற்றிருக்கிறது என்று முடிவுசெய்யலாம். இனி, அட்டவணை 1இல் கி.பி.736 ஆம் ஆண்டு எந்த வரிசை எண்ணில் இருக்கிறது என்பதைக் காணவேண்டும். இங்கு கி.பி.736ஆம் ஆண்டு வரிசை எண் 8இல் உள்ளதை அறிவோம். இப்பொழுது அட்டவணை 2இல் வரிசை எண் 8ஐக் குறிக்கும் மார்ச்சுமாத எண்ணைக் குறித்துக் கொள்ளவேண்டும். இங்கு எண் 5 ஆகும். அட்டவணை 3இல் வரிசைஎண் 5இல் தேதி 22ஐக் கண்டால் கிழமை கிடைத்துவிடும். இங்குக் கிழமை வியாழன் என்பது புலப்படும். | </p> |
| <p> | இப்பொழுது 22.3.736 ஆம் ஆங்கிலத் தேதியானது கலியுகம் 3837, சாலிவாகன சகாப்தம் 815, விக்கிரம சகாப்தம் 793, திருவள்ளுவராண்டு 767, தமிழ்த் தாது ஆண்டு சித்திரை மாதம் 3ந் தேதி வியாழக்கிழமை என முடிவுசெய்யலாம். இந்திய காலக்குறிப்பிலிருந்து ஆங்கிலக் காலக்குறிப்பைக் காணல் | </p> |
| <p> | இந்திய ஆண்டுகளாக எண்ணப்படும் கலியுகம், சாலிவாகனம், விக்கிர, கொல்லம், திருவள்ளுவர் மற்றும் தமிழ் உள்ளிட்ட ஆண்டுக் குறிப்புகளைக் கொண்டு ஆங்கிலக் காலத்தை எப்படிக் காண்பது பற்றி இங்குக்காண்போம். | </p> |
| | | |
| <p> | இங்கு முன்தமிழ் மாதமான ஆனி மாதம் ஜூன் மாத்தில் 14 நாள்கள் உள்ளது எனலாம். 14க்குள் 10 அடக்கம் என்பதால் ஜூன் மாதத்திலேயே ஆனி மாதம் 10ந் தேதி உள்ளது எனத் தெளியலாம். எனவே, 14லோடு 10ஐக் கூட்ட ஆனி 10க்கு நிகரான ஜூன்மாத தேதி கிடைத்து விடும். 14+10=24 எனக் கண்டால் ஜூன் மாதம் 24 நாள்கள் எனக் கொள்ளவேண்டும். இப்பொழுது ஜூன் மாதம் 24ந் தேதி என்ன கிழமை எனக் காணவேண்டும். இப்பொழுது அட்டவணை 1இல் 1959இன் வரிசை 11. அட்டவணை 2இல் ஜூன் மாத வரிசை எண் 11இல் உள்ள எண்ணைக் காணவேண்டும். இங்கு எண் 2. இனி அட்டவணை 3ஐப் பார்க்கவேண்டும். அட்டவணை 3இல் வரிசைஎண் 2இல் 24ந் தேதி என்னகிழமை என்பதைக் காணவேண்டும். இங்கு புதன்கிழமை என வருகிறது. காலக்குறிப்புப்படி வெள்ளிக்கிழமை என்பதால் 1959ஆம் ஆங்கில ஆண்டில் வரும் தமிழ் விகாரி ஆண்டு இது இல்லை என்பதை தெரியலாம். இதேபோல் ஒவ்வொரு ஆண்டிற்கும் செய்துவந்தால் ஏதாவதொரு விகாரி ஆண்டில் வெள்ளிக்கிழமை பொருந்திவரும். அந்த ஆண்டே காலக்குறிப்பில் குறிப்பிட்ட விகாரி ஆண்டாகக் கொள்ளவேண்டும். | </p> |
| <p> | இப்படி ஒவ்வொரு ஆண்டாக கணக்கிட்டு அறிவதைத் தவிர்ப்பதற்காக அவ்வாண்டுடன் கூறப்படும் கொல்லம் ஆண்டோ, சாலிவாகன ஆண்டோ, கலியுக ஆண்டோ, விக்கிரம ஆண்டோ, திருவள்ளுவராண்டோ, இருப்பின் இச்சிக்கல் விடுபட்டு எளிதில் காலத்தைக் கணிக்க முடியும். எடுத்துக்காட்டாக ஒன்றைக் காண்போம். | </p> |
| <p> | கொல்லம் 848 புரட்டாசி 8ந் தேதி ஞாயிற்றுக்கிழமை என்னும் காலக்குறிப்பை எடுத்துக்கொள்வோம். கொல்லமாண்டிற்கு நிகரான ஆங்கில ஆண்டைக் கணக்கிட்டு அவ்வாண்டின் தமிழாண்டைக் கணக்கிடலாம். ஆவணி மாதம் 1ந் தேதி கொல்லம் ஆண்டு பிறப்பதாலும் புரட்டாசி மாதம் ஆவணியை அடுத்து வருவதாலும் கொல்லமாண்டினோடு 824ஐக் கூட்டி (848+824=1672) ஆங்கில ஆண்டை கணக்கிடவேண்டும். இப்பொழுது கொல்லம் ஆண்டு 848க்கு நிகரான ஆங்கில ஆண்டு 1672 என முடிவாகிவிட்டது. இனி 1672ஆம் ஆங்கில ஆண்டு எந்த தமிழாண்டில் வருகிறது என்பதைக் காணவேண்டும். இதற்கு அட்டவணை 5ஐக் | </p> |

| | | |
|---|---|---|
| | காணவேண்டும். இங்கு 1672ஆம் ஆண்டு வரிசைஎண் 42இல் பின்னாங்கில ஆண்டாகவும் 46இல் முன்னாங்கில ஆண்டாகவும் இருப்பதைக் காணலாம். சித்திரை மாதம் 1ந் தேதி பின்னாங்கில ஆண்டு தொடங்கிவிடுவதால் புரட்டாசி மாதம் பின்னாங்கில ஆண்டில் (வரிசை எண் 45) வருவதாகக் கருதவேண்டும். இப்பொழுது அட்டவணை 4இல் வரிசை எண் 45 ஆனது விரோதிகிருது எனத் தெரிவு செய்யலாம். | |

</body></text>
</Doc>